

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் சர்வதேச, தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநில பெற்றோர் – ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி. முத்துக்குமார், பள்ளிக் கல்வி இயக்கசு இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் பெ. குப்புசாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ. நரேஷ் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் மாணவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதை நோக்கமாக கொண்ட உடற்கல்வி ஆசிரியர் வளநூல் எனும் புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநில பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி. முத்துக்குமார், பள்ளிக் கல்வி இயக்கசு இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் பெ. குப்புசாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ. நரேஷ் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை புரிய

# அனைத்து வகைகளிலும் ‘திராவிட மாடல்’ அரசு துணை நிற்கும்!

### சென்னை விழாவில் விளையாட்டு வீரர்களுக்குச் சான்றிதழ் வழங்கி

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, ஜூலை 24-**

**சென்னையில் சர்வதேச - தேசிய - மாநில அளவிலான போட்டிகளில், கடந்தாண்டு வெற்றிபெற்ற தமிழ்நாட்டுப் பள்ளிகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ - மாணவிகளுக்கு பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பாராட்டுச் சான்றிதழ்களை நேற்று முன்தினம் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், எந்தப் போட்டி என்றாலும், வெற்றி எவ்வளவு முக்கியமோ அதைவிட விடாமுயற்சியும் முக்கியம். அந்த வகையில், விடாமுயற்சியுடன் ஆடுகளத்திலும் ஆட்ட நாயகர்களாகவும் வலம் வரும் தமிழ்நாட்டு மாணவர்களை வாழ்த்தி உரையாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:**

மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் இந்த விழாவில், பங்கேற்று உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பள்ளிகளில் இருந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டுவது என்பது மிக மிக முக்கியமான நிகழ்வாகும். இதைத் தொடர்ந்து செய்து வரும் பள்ளிக் கல்வித்துறைக்கு, முதலில் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

#### மகிழ்ச்சியும், நம்பிக்கையும்

பள்ளிக் கல்வித்துறையின் சார்பாக இப்படிப் பாராட்டுவிழா எடுப்பதன் மூலம், விளையாட்டுத்துறையின் அமைச்சராக எனக்குக் கூடுதல் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் நீங்கள் கொடுத்துக்கொண்டே இருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் இருந்து இளம் விளையாட்டு வீரர்களை அடையாளம் காண்பதற்கு, இது போன்ற நிகழ்ச்சிகள் மிகப்பெரிய அளவில் கைகொடுக்கின்றன.

பாடப் புத்தகத்தில் உள்ள பாடத் திட்டத்திலிருந்து கிடைக்கிற கல்வி மட்டுமல்ல, விளையாட்டின் மூலமும் நிறைய விஷயங்களை மாணவர்களாகிய நீங்கள் கற்றுக்கொள்ள முடியும்.

ஒத்துழைப்பு, கூட்டுமுயற்சி, நம்பிக்கை, நட்பு, வியூகம், திட்டமிடல், செயல்படுத்துதல், என வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை குணங்களையும் நமக்கு விளையாட்டு கற்றுத் தருகிறது. சாதாரணமாக பாடப்புத்தகத்தை மட்டும் படிக்கிற போது, இதையெல்லாம் கற்றுக் கொள்ள முடியாது. எனவே, படிப்பிலும், விளையாட்டிலும் ஈடுபடக்கூடிய மாணவர்களாகிய நீங்கள் எப்போதுமே தனிச் சிறப்புடன் இருப்பீர்கள். கல்வியிலும் கவனம் செலுத்தவேண்டும், அதேநேரத்தில் விளையாட்டிலும் உங்கள் கவனம் இருக்க வேண்டும்.

விளையாட்டு என்றால், தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, அந்த நேரத்தில் தவறாமல் பயிற்சியில் ஈடுபட வேண்டும். எப்போதாவது விளையாட்டுத் திடல் பக்கம் தலை காட்டினால் போதும் என்று இருந்து விடக்கூடாது. நீங்கள் தொடர்ந்து பயிற்சி செய்யும்போதுதான், கொஞ்சம் கொஞ்சமாக உங்களுடைய திறமை, உங்களை அறியாமலேயே கூடிக்கொண்டு போகும். நீங்கள் அடுத்தடுத்த உயரங்களைத் தொடுவதற்குத் தொடர்ந்து, நீங்கள் பயிற்சி செய்ய வேண்டும். மென்மேலும் போட்டிகளில் அதிகமாக பங்கேற்க வேண்டும்.



#### வெற்றியும் விடாமுயற்சியும்

விளையாட்டைப் பொறுத்தவரைக்கும் வெற்றி எவ்வளவு முக்கியமோ விடாமுயற்சியும் அதே அளவுக்கு முக்கியம். 1992-ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் எத்தனையோ பேர் பதக்கங்களை வென்றார்கள். ஆனால், 1992 ஒலிம்பிக் என்று சொன்னாலே, ஒருவரின் பெயர் நம் எல்லோருக்கும் ஞாபகம் வரும். அவர் பெயர்தான் பிரிட்டிஷ் ஓட்டப்பந்தய வீரர் டெரெக் ரெட்மாண்ட் பெயர்தான். அவர் பதக்கம் வெல்லவில்லை. ஆனால், அவரை ஏன் எல்லோருக்கும் தெரிகிறது என்றால், அந்த ஒலிம்பிக்கில் அவர் வெளிப்படுத்திய விடாமுயற்சிதான் அதற்கு காரணம்.

அந்த ஒலிம்பிக்கில் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஓடும்போது, பாதி தூரத்தில் ஓடிக்கொண்டு இருக்கும் போதே, அவருக்கு கடுமையான தசைப் பிடிப்பு ஏற்படுகிறது. அதனால் அதற்கு மேல் அவரால் ஓட முடியவில்லை. ஓட முடியாமல் போனாலும், தன்னுடைய கால்களால் நொண்டிக்கொண்டே இலக்கு வரைக்கும் முடிக்க முயற்சி செய்தார்.

#### நாங்கள் ஓட வேண்டும்

அதைப் பார்த்த அவருடைய அப்பாவும் மைதானத்திற்குள் ஓடிச் சென்று அவரை கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு அவரும் ஓட முயற்சி செய்தார். அங்கே இருந்த பாதுகாவலர்கள் வந்து, அவர்கள் தடத்தை விட்டு வெளியே போக வேண்டும் என்று சொன்னார்கள்.

அப்போது அவரின் அப்பாவும், மகனும் சொன்னார்கள். எங்களை விட்டு விடுங்கள், தடத்தில் நாங்கள் ஓட வேண்டும். எங்களுடைய லட்சியம் போட்டியில் வெற்றிபெற வேண்டும் என்பது மட்டுமல்ல, இலக்கை அடைந்திட வேண்டும் என்பதுதான்.

*"We don't want to win, but we want to finish the race"* என்றுச் சொன்னார்கள். ரெட்மாண்டை கடைசிக்கோடு வரை கொண்டு வந்து சேர்த்தவர் அவரது தந்தை. டெரெக் ரெட்மாண்ட் இந்த விடாமுயற்சியையும், உறுதியையும் பார்த்து, மைதானத்தில் இருந்த லட்சக்கணக்கான பார்வையாளர்கள் எழுந்து நின்று, கைத்தட்டினார்கள்.

இதை எதற்காக சொல்கிறேன் என்றால், வெற்றிகள் மட்டும்தான் வரலாற்றில் நிலைக்கும் என்று கிடையாது. சில நேரங்களில், விடாமுயற்சியும் வரலாற்றில் நிலைக்கும் என்பதற்கு டெரெக் ரெட்மாண்ட்தான் மிகச் சிறந்த உதாரணம். ஆகவே, என்ன இடையூறு வந்தாலும், உங்களுடைய விடாமுயற்சியை மட்டும் தயவுசெய்து கைவிடாதீர்கள்.

#### திராவிட மாடல் அரசு

உங்களுக்கு அனைத்து வகையிலும், துணை நிற்க நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம் திராவிட மாடல் அரசும், நம் விளையாட்டுத்துறையும் இருக்கின்றன. நானும் என்றைக்கும் உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, உங்கள் அண்ணனாக, உங்களின் எல்லா முயற்சிக்கும் துணை நிற்பேன்.

நீங்கள் வெளிநாடு, வெளி மாநிலங்களுக்குச் சென்று விளையாடுகிற போது, உங்களுக்காக உதவிட, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும். அதன் மூலம், நிதி உதவி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம்.

ஆகவே, நீங்கள், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதற்காக tnchampions.sdat.in என்கிற இணையதளத்தில் நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்களுக்கு உடனடியாக அந்த உதவிகள் செய்யப்படும். இந்த ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்கான விண்ணப்பத்தைத் தொடங்கியுள்ளோம். கிட்டத்தட்ட பரிசுத் தொகை மட்டும் 36 கோடி ரூபாய், தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளின் மூலமாக கொடுக்கப்படுகிறது. அதிலும், நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



> **“விளையாட்டு என்றால், தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, அந்த நேரத்தில் தவறாமல் பயிற்சியில் ஈடுபட வேண்டும். எப்போதாவது விளையாட்டுத் திடல் பக்கம் தலைகாட்டினால் போதும் என்று இருந்து விடக்கூடாது. நீங்கள் தொடர்ந்து பயிற்சி செய்யும்போது-தான், கொஞ்சம் கொஞ்சமாக உங்களுடைய திறமை, உங்களை அறியாமலேயே கூடிக் கொண்டு போகும். நீங்கள் அடுத் தடுத்த உயரங்களைத் தொடு வதற்குத் தொடர்ந்து, நீங்கள் பயிற்சி செய்ய வேண்டும். மென் மேலும் போட்டிகளில் அதிகமாக பங்கேற்க வேண்டும்.”**

#### ஒரேயொரு கோரிக்கை

இறுதியாக ஒரேயொரு விஷயம், பல நிகழ்ச்சிகளில் பேசும்போது உங்களிடம் பலமுறை சொல்லி இருக்கிறேன். மாணவர்களின் சார்பாக ஆசிரியர்களிடம் ஒரேயொரு கோரிக்கைதான். விளையாட்டு வகுப்பை எந்த ஆசிரியரும் கடன் வாங்கி, அதில் பாடம் நடத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சரை வைத்துக்கொண்டுதான் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். வேண்டுமென்றால் அறிவியல், கணக்கு ஆசிரியர்கள் உங்களின் பாட வகுப்பை, விளையாட்டு வகுப்புக்கு கடன் கொடுங்கள். ஏனென்றால் விளையாட்டு வகுப்பு என்பது ஒவ்வொரு மாணவரின் உரிமை. அதில் அவர்கள் கண்டிப்பாக நீங்கள் விளையாட வேண்டும். விளையாட்டுப் பயிற்சிக்கு அதை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இங்கே இவ்வளவு மாணவர்கள் பதக்கங்கள் வாங்கி இருப்பதை பார்க்கும்போதே, எனக்குத் தெரிகிறது. இப்போதெல்லாம் விளையாட்டு வகுப்பில் விளையாட அனுமதிக்கிறீர்கள் என்பதை எங்களால் உணர முடிகிறது.

அதற்காக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும், வந்திருக்கின்ற ஆசிரியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பதக்கங்களை வென்ற மாணவ, மாணவிகளுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், அவர்களுடைய பயிற்சியாளர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த நல்ல வாய்ப்பைக் கொடுத்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அரசு அதிகாரிகளுக்கும், வந்திருக்கின்ற மாணவச் செல்வங்கள், விளையாட்டு வீரர்கள் உங்கள் அத்தனைப் பேருக்கும், மீண்டும் எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் ஐ.பரந்தாமன், பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் சந்திரமோகன் ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு மாநில பெற்றோர் - ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் முத்துக்குமார், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன், இயக்குநர்கள் நரேஷ், குப்புசாமி, இணை இயக்குநர் சசிகலா, தனியார் பள்ளிகள் சங்கத் தலைவர் அரசகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, சுதாகர், வேலு, மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன், விளையாட்டு வீரர்கள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், மாணவர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.